### ஸ்மார்ட் சிட்டி திட்டத்திற்காக

# சர்வதேச அளவில், நவீன வசதியுடன் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையம்

## ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைகிறது

**சென்னை, அக். 7:** ஸ்மார்ட் சிட்டி திட்டத்திற்காக சர்வதேச அளவில், நவீன வசதியுடன் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையம் ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைக்க, சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இதற்கான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி விரைவில் தொடங்கவுள்ளது.



சென்னை மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் ₹1000 கோடி மதிப்பில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. இதை தவிர்த்து, திட்ட பணிகள் மற்றும் வசதிகளை கண்காணிக்க ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் ₹150 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்படி சென்னையில் பல்வேறு இடங்களில் சிசிடிவி கேமரா அமைத்தல், ஸ்மார்ட் கம்பங்கள், நடைபாதை, பார்க்கிங், வடிகால் உள்ளிட்டவை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. கேரள அரசு நிறுவனமான கேரளா ஸ்டேட் எலக்ட்ரானிக்ஸ் கார்பரேஷசன் இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

சென்னையின் நிலையான, ஒருங்கிணைந்த மற்றும் முழுமையான மாற்றங்களை, மக்கள் பங்களிப்போடும் அனைத்து துறைகளின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றுவதே இந்த ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டுமையத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த மையம் வெவ்வேறு துறைகளிடமிருந்து பல்வேறு விவரங்களை சேகரித்து அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து முக்கிய திட்டங்கள் மற்றும் பணியை செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைந்த வாகன நிறுத்த மேலாண்மை திட்டம், இன்டலிஜென்ட் டிரான்ஸ்போர்ட் திட்டம் உள்ளிட்ட திட்டங்களும் செயல்படுத்தபட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சி அலுவலகம் செயல்படும் ரிப்பன் மாளிகை வளாகத்தில் 900 சதுர மீட்டர் பரப்பளவில் தரைதளம் மற்றும் மூன்று மாடிகளுடன் இந்த கட்டுப்பாட்டு மையத்தை அமைக்க சென்னை மாநகராட்சி முடிவு செய்துள்ளது. தற்போது வாகன நிறுத்தமாக பயன்படுத்தபட்டு வரும் ரிப்பன் மாளிகைக்கு பின்புறம் உள்ள இடத்தில் இந்த மையம் அமையுள்ளது. இந்த மையத்தில் பேரிடர் மேலாண்மை மையமும், ஸ்மார்ட் கவர்மென்ஸ் மையமும் அமையவுள்ளது.

> **இந்த ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்தில் பேரிடர் மேலாண்மை மையமும், ஸ்மார்ட் கவர்மென்ஸ் மையமும் அமையவுள்ளது**

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறியதாவது:

சென்னை மாநகராட்சியால் செயல்படுத்தபட்டு வரும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்திற்கான கட்டுப்பாட்டு மையம் தற்போது தனியாக அமைக்கப்படவுள்ளது. இந்த மையம் சர்வதேச அளவில், அதிநவீன வசதிகளுடன் அமையவுள்ளது. இதன் வடிவம், உட்புற வடிவமைப்பு, வெளிப்புற வடிமைப்பு, பசுமைக்கு ஏற்ற வகையில் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் தொடர்பாக விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.